1st August 1966]

(இ) சமீப காலம் வரை, உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட என்ஜின்களின் விலை இறக்குமதியாகும் என்ஜின்களின் விலையை விட அதிகமாகவே இருந்தது. ஆனால், உள்நாட்டு என்ஜின்கள் வெளி நாட்டு என்ஜின்களை விடத் தரம் குறைந்தவை என்று சொல்ல முடியாது.

(உ) இந்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி, தேவைப் படும் என்ஜின்களில் 50 சதவீதம் அல்லது தேவைப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதி உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து பெறப்பட வேண்டும். எஞ்சிய பொருள்களை மட்டும் இறக்குமதி செய்ய இந்திய அரசு ஏற்பாடு செய்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் இதுவரை தயாரித் திருக்கக்கூடிய விசைப் படகுகள் எத்தனை? அவற்றில் விநியோ கிக்கப்பட்டிருப்பவை எத்தனை? உபயோகத்தில் இருப்பவை எத்தனை? கொடுக்கப்பட்டு பிறகு மாற்றிக் கொடுக்கப்பட வேண்டு மென்று எவ்வளவு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? அதற்குரிய காரணங்களை அறியலாமா? என்ஜின்கள் எவ்வளவு வெளிநாடு களிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கின்றன? உள்நாட்டில் அப்படிப் பட்ட என்ஜின்கள் இருக்கின்றனவா? அவற்றிற்கு வேண்டிய உபகரணங்கள் உள்நாட்டில் கிடைக்கின்றனவா இல்லையா?

கனம் திரு. கோ. பூவராகன் : எவ்வளவு வழங்கப்பட்டிருக் கின்றன, எவ்வளவு சரியாக ஓடுகின்றன என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

Development of Mahabalipuram

* 18 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether it is a fact that there is a proposal to develop Mahabalipuram, as a top-class sea-side holiday resort, on the pattern of the Spanish holiday resort at Torremolinos; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : மாமல்லபுரத்தை ஒருங்கிணைந்த முறையில் அபிவிருத்தி செய்யும் திட்டம் இந்தத் துறையில் பரிசீலனையில் இருக்கிறது.

(இ) இதற்கான வேலைத் திட்ட விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சா. கணேசன் : அபிவிருத்தித் திட்டம் கவனத்தில் இருக் கிறது என்று சொல்லும்போது அங்கு இன்னும் நிறைய அறை களைக் கொண்ட கட்டடங்கள் கட்டி ரோடையும் இன்னும் செம்மைப்படுத்தி சுற்றும்சூழ நல்ல குளிர்ச்சியான மரங்கள் செடிகொடிகள் போன்றவற்றை வைத்துப் பெரிய இடத்திற்குத் தக்க பந்தோபஸ்த்துக்களையும், அழகுகளையும் உற்பத்தி செய்து இதன் மூலமாக இன்னும் ஏராளமான வெளிநாட்டவர்கள் வந்து

காண்பது மட்டுமன்றி சில நாட்கள் தங்கியிருக்கவும் வேண்டிய அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : விரிவானதொரு திட்டம் மத்திய அரசாங்கம் நம் அரசாங்கக் கூட்டோடு தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்டம் முழுமையும் பற்றி இந்தச் சமயத்தில் வெளியிட வேண்டாம் என்று நினைக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த மாமல்லபுர வளர்ச்சித் திட்டத்தில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக மின் இரயில் இணைக்க ரெயில்வே இலாகா ஏதாவது செய்ய வேண்டுமென்று நம் அரசாங்கம் ஏதாவது கேட்டிருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால் அதையும் சிபார்சு செய்யுமா? அதாவது, திருக்கழுக்குன்றம் வழி மகாபலிபுரத்திற்கு மின் ரெயில் விடுவதற்கு.

கனம் திரு. கோ. பூவராகன் : மகாபலிபுரத்திற்குப் பிரயாணிகள் வந்து போவது பற்றிய கேள்வி இது. அதற்குத் தக்க விதத்தில் அதை மேலும் விரிவுபடுத்துவதுபற்றிய கேள்வி இது. அது சம்பந்தமாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று பதில் கூறினேன். ரெயில் தொடர்பு கொடுப்பது பற்றி அது சம்பந்தமான இலாக்கா அமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன் : இந்தத் திட்டத்தைப் பற்றித் தெரிவிப்பதால் எந்தவிதமான முறையிலும் பந்தோபஸ்துக் குறைவோ அல்லது வருத்தமோ துன்பமோ அல்லது துயரமோ எதுவும் ஏற்படக்கூடிய நிலை இல்லை. இந்தத் திட்டத்தைப் பற்றி தெரிவிப்பது நல்லதல்ல என்று பொருள்பட அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படித் திட்டத்தில் என்ன அந்தரங்கம் அல்லது இரகசியம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : எவ்வளவு தேர்ந்தெடுக்கப் போகிறோம், எங்கெங்கு எடுக்கப் போகிறோம் என்று சொன்னால் பக்கத்தில் உள்ள நிலங்களின் விலை உயர சந்தர்ப்பம் இருக்கும். ஆகவே, வெளியிட வேண்டாமென்று சொன்னேன்.

Yercaud Township Committee

* 19 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Yercaud Township Committee has been constituted; and

(*b*) if so, the names of members of the Committee and the basis on which they were selected?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

11-30 a.m. (இ) 'டவுன்ஷிப்' குழுவின் உறுப்பினர்கள் கீழ்க்கண்டவர்களாவர் :—

(1) சேலம் மாவட்டக் கலெக்டர். (தலைவர்).